**செ.வெ.எண்:41** **நாள்:22.03.2018**

# பத்திரிக்கைசெய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கற்கும் பாரதம் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் 15 வயதிற்கு மேல் 80 வயதிற்குள் எழுதபடிக்க தெரியாதவர்கள் அனைவருக்கும் **25.03.2018** அன்று அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு நடைபெற உள்ளது, இத்தேர்வில் அரியலூர் மாவட்டத்தில் 3614 பயனாளிகள் தேர்வு எழுத உள்ளனர்.

இத்தேர்வானது ஆறு ஒன்றியங்களில் உள்ள 110 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். இத்தேர்வினை கற்கும் பாரத மையத்தில் படித்தவர்களும், மையத்தில் படிக்காத மற்ற கல்லாதவர்களும் இத்தேர்வினை எழுதலாம். மேலும் கடந்த முறை நடந்து முடிந்த தேர்வுகளில் தேர்ச்சி பெறாதவர்களும் இத்தேர்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**